டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.02.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 188 - Madurai | Online Edition

# இந்திய வானிலை ஆய்வுத்துறை மூலம் வானிலை குறித்த தரவுகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது

## மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர தகவல்

புது தில்லி, பிப்.5

அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், வானிலை முன்னறிவிப்புகளை இந்திய வானிலை ஆய்வுத் துறை அளித்து வருகிறது.

கிராம வேளாண் வானிலை சேவைத் திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து நாட்களுக்கு மாவட்ட மற்றும் வட்டார அளவில் நிலவக் கூடிய மழைப்பொழிவு, வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம், காற்றின் திசை ஆகியவை குறித்து வானிலை முன்னறி விப்புகளை இந்திய வானிலை ஆய்வுத்துறை வழங்கி வருகிறது. அத்துடன், வானிலை தகவல் மற்றும் முன்னறிவிப்பு அடிப் படையில் நாட்டின் 127 வேளாண் பருவநிலை மண்டலங்களில் உள்ள 130 வேளாண் வானிலை கள பிரிவுகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்காக ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளில் வாரத்திற்கு இரண்டு முறை (செவ்வாய், வெள்ளி) வேளாண் வானிலை அறிவுரைகளை அளித்து விவசாயிகள் தங்களது அன்றாட வேளாண் நடவடிக்கைகளில் உரிய முடிவுகளை மேற்கொள்வதற்கு உதவுகிறது.

இத்தகவலை மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மக்களவையில் தெரிவித்தார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் எஞ்சிய நஞ்சு பரிசோதனைக்கு மாதிரி சேகரிப்பு (பங்களிப்பு உத்திரவாத திட்டம்)



திருச்சி, பிப்.5

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் ஒரே கிராமத்தில் அல்லது அருகாமையில் உள்ள கிராமத்தை சேர்ந்த உயிர்ம விவசாயிகளை ஒரு குழுவாக சேர்த்து பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம் - பங்களிப்பு உத்திரவாத முறையில் 2023-2024ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் எவ்வித கட்டணமும் இல்லாமல் உயிர்மச் சான்று பெறலாம். இத்திட்டத்தின் கீழ் உயிர்மச்சான்று பெற்ற பொருட்களை உள் நாட்டில் வணிகப்படுத்த முடியும்.

இத்திட்டத்தில் ஒரு குழுவில் உள்ள முதன்மை உயிர்ம விவசாயி மற்றொரு குழுவில் உள்ள விவசாயிகளின் வயலை ஆய்வு செய்து ஆய்வறிக்கை சமர்ப்பிப்பர். ஆய்வு முடிவுகள் குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு ஒவ்வொரு பருவத்திற்கும் வாய்ப்புச் சான்று வழங்கப்படும்.

இவ்வாறு கடந்த மூன்று ஆண்டுகளாக பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வாய்ப்புச் சான்று பெற்ற உயிர்ம விவசாயம் செய்யும் விவசாயிகளின் விளைபொருட்களின் உயிர்மத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு எஞ்சிய நஞ்சு பரிசோதனைக்கு மாதிரிகள் எடுக்கப்பட்டு அப்பீடா அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்திற்கு விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் மூலம் அனுப்பப்படுகிறது. பகுப்பாய்வு செய்வதன் மூலம் உயிர்ம வேளாண்மையின் நம்பகத் தன்மை மற்றும் நுகர்வோருக்கு விளைபொருட்களின் உயிர்மத்தன்மை மீது நம்பிக்கை அதிகரிக்கும். இவ்வாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பருத்தி சாகுபடியில் விதைப்பரிசோதனையின் அவசியம்

நாகப்பட்டினம், பிப்.5

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நெல் சாகுபடிக்கு பின் பருத்தி பயிரானது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. பருத்தி சாகுபடியில் அதிக விளைச்சல் பெற்று விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த முக்கிய பங்கு வகிப்பது நல்ல தரமான விதைகளையே ஆகும். ஆகவே பருத்தி சாகுபடி செய்வதற்கு முன்பு தேர்ந் தெடுக்கப்பட்ட இரகத்தின் விதை முளைப்புத்திறன் 75 சதவீதமும், 98 சதவீதம் புறத்தூய்மையும், 10 சதவீதம் ஈரப்பதமும் கட்டாயம் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் விதையே நல்ல தரமான விதைகள் ஆகும்.

ஆகவே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தி யாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் தரத்தை பரிசோதனை செய்து கொள்ள 100 கிராம் விதை மாதிரியுடன் ஒரு மாதிரிக்கு ரூ.80 கட்டணத்தை மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், எண்.15, காளியம்மன் கோவில் தெரு, நாகப்பட்டினம் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் தபாலிலோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்செய்தியினை தஞ்சை சரக விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீர பாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதா தேவி மற்றும் செ.பிரசன்னா ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மாமரத்தில் மாவுப் பூச்சி கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.5

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள், எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை நேரில் சந்தித்து, பயிர் மேலாண்மையில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில், இன்றைய தினம் எலச்சிப்பாளையம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கடாச்சலத்தை சந்தித்த மாணவர்கள், அவரின் மா மரப் பயிர்களில் மாவுப் பூச்சி மற்றும் எறும்புகள் அதிக அளவில் தாக்கம் செய்துள்ளதை கண்டறிந்தனர்.

இதனை கட்டுப்படுத்தும் நோக்கில், மாணவர்கள் விவசாயிகளுக்கு மாமரத்தில் பட்டை கட்டும் முறை குறித்து செயல் விளக்கத்துடன் எடுத்துரைத்தனர். இம்முறையில், மாமரத்தின் தண்டுப் பகுதியில் பிளாஸ்டிக் தாளை சுற்றி கட்டி, அதன் மேல் ஒட்டும் திரவம் அல்லது கிரீஸ் பூசுவதன் மூலம், எறும்புகள் மற்றும் மாவுப் பூச்சிகள் மரத்தின் மேல் பகுதிக்கு ஏறுவதைத் தடுக்கலாம் என விளக்கினர்.

இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் பூச்சி தாக்கம் கட்டுப் படுத்தப்பட்டு, மலர்ச்சி மற்றும் காய்ப்பிடிப்பு அதிகரிக்கும் என்றும், ரசாயன மருந்துகள் பயன்பாடு குறையும் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர். மாணவர்களின் ஆலோசனையால் விவசாயி பயனடைந்ததுடன், இம்முறையை தனது தோட்டத்தில் நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
*+91 80563 05483*
*+91 9344811812*

# எள் பயிரில் சாம்பல் நோய் மேலாண்மை வேளாண்மை அதிகாரி அறிவிப்பு



அரியலூர், பிப்.5

அரியலூர் மாவட்டத்தில் நடப்பாண்டு எள்ளு பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் நான்காயிரம் எக்டர் மேல் சாகுபடி செய்யப்பட்டது. இந்த வருடமும் நான்காயிரம் எக்டர் மேல் சாகுபடி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியின் உத்தரவின் படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் எள்ளு சாகுபடி வயலை ஆய்வு செய்தார். ஆய்வின் போது, எள்ளு பயிர் சாம்பல் நோயில் பாதிக்கப்பட்டது என்பது அறியப்பட்டது. சாம்பல் நோய் என்பது எள்ளு பயிரில் அடிக்கடி காணப்படும் ஒரு பூஞ்சை நோயாகும். இந்த நோய் வந்தால் இலைகள், தண்டுகள் மற்றும் மலர் பகுதிகளில் வெள்ளை மாவு போன்ற பூஞ்சை படலம் தோண்டி, மகசலை கடுமையாக பாதிக்கும்.

**நோயின் அறிகுறி :** இலையின் மேற்பரப்பில் வெள்ளை சாம்பல் நிற மாவு போன்ற படலம், இலைகள் மஞ்சள் நிறமாகி உதிர்ந்து விடுதல். தாவர வளர்ச்சி குன்றி காணப்படும், காய் பிடிப்பு குறையும். எள்ளு விதைகள் சிறியதாகும்.

**இந்த சாம்பல் நோயை பின்வருமாறு கட்டுப்படுத்தலாம்**

**பண்பாட்டு மேலாண்மை :** இந்த வகையில் நோயற்ற தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும். சரியான இடைவெளி 30 ஷ 10 சென்டிமீட்டர் பராமரிக்க வேண்டும். நோயுற்ற இலைகள் செடியை அகற்றி, அளிக்க வேண்டும். அதிக அளவு தழைச்சத்து உரத்தை தவிர்க்க வேண்டும். சமச்சீர் முறையில் உரம் இடுதல் வேண்டும். பயிர் சுழற்சி பின்பற்ற வேண்டும்.

**உயிரியல் மேலாண்மை :** சூடோமோனாஸ் ஐந்து கிராம் ஒரு லிட்டர் நீர், டீவிரிடி ஒரு லிட்டர் நீர், நோய் ஆரம்ப நிலையில் 10 லிருந்து 15 நாட்களுக்குள் ஒரு முறை இலையின் மேல் தெளிக்க வேண்டும்.

**இயற்கை முறையில் மேலாண்மை :** வேப்ப எண்ணெய் 3 மில்லி ஒரு லிட்டர் நீர், மோர் கரைசல் 10 சதவீதம் இலை மேல் தெளித்தல், பால் : நீர் 1:9 என்ற விகிதம் நோய் தாக்குதலில் ஆரம்ப நிலையில் தெளித்தால் மிகுந்த பயனளிக்கும்

ரசாயன மேலாண்மை : Wettable sulper( 80wp) 2.5 g/liter, water, அல்லது Hexaconazole (5 EC)1 ml / liter water அல்லது Tebuconazole (25 EC) 0.5 - 1.0 ml / liter water. என்ற வகையில் 10 முதல் 12 நாட்கள் இடைவெளியில் மாற்றி மாற்றி தெளிக்க வேண்டும். என வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி தெரிவித்தார்.



# சிறு விவசாயிகளின் வயல்களில் செயற்கை நுண்ணறிவு (AI) – வரப்பிரசாதமா? சவாலா?

**முன்னுரை :** இந்திய விவசாயம் இன்று ஒரு மாற்றக் காலத்தில் உள்ளது. பாரம்பரிய விவசாய முறைகளுடன், புதிய தொழில் நுட்பங்கள் இணைந்து வளர்ந்து வருகின்றன. அந்த தொழில் நுட்பங்களில் முக்கியமான ஒன்றாக செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) உள்ளது. பெரிய விவசாய நிலங்களில் மட்டுமல்லாமல், இன்று சிறு மற்றும் குறு விவசாயிகளின் வயல்களிலும் AI மெதுவாக இடம் பிடித்து வருகிறது.

**AI என்றால் என்ன?**

செயற்கை நுண்ணறிவு என்பது மனித புத்திசாலித்தனத்தைப் போல செயல்படும் கணினி தொழில்நுட்பமாகும். இது தரவுகளை சேகரித்து, பகுப்பாய்வு செய்து, சரியான முடிவுகளை எடுக்க உதவுகிறது. விவசாயத்தில், பயிர் வளர்ச்சி, நோய் கண்டறிதல், வானிலை கணிப்பு போன்றவற்றில் AI பயன்படுத்தப்படுகிறது.

**சிறு விவசாயிகளுக்கு AI எவ்வாறு உதவுகிறது?**

**1. பயிர் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை**

AI அடிப்படையிலான மொபைல் செயலிகள் மூலம், பயிர்களின் இலைப் படங்களை எடுத்தால் நோய் அல்லது பூச்சி தாக்கத்தை உடனடியாக கண்டறிய முடிகிறது. இதனால் சரியான மருந்தை சரியான நேரத்தில் பயன்படுத்த முடிகிறது.

**2. வானிலை முன்னறிவிப்பு**

AI தொழில்நுட்பம் மூலம் துல்லியமான மழை, வெப்பநிலை, காற்று போன்ற வானிலை தகவல்களை விவசாயிகள் அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் விதைப்பு, உரமிடல், தெளிப்பு போன்ற பணிகளை சரியான நேரத்தில் செய்ய முடிகிறது.

**3. உரம் மற்றும் நீர் மேலாண்மை**

AI மண் பரிசோதனை தரவுகளை பயன்படுத்தி, எந்த பயிருக்கு எவ்வளவு உரம் தேவை என்பதை பரிந்துரைக்கிறது. இது செலவைக் குறைத்து, விளைச்சலை அதிகரிக்க உதவுகிறது.

**4. விளைச்சல் கணிப்பு**

AI அடிப்படையிலான கணிப்புகள் மூலம், எதிர்பார்க்கப்படும் விளைச்சலை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடிகிறது. இது

சந்தைப்படுத்தல் மற்றும் விலை நிர்ணயத்தில் விவசாயிகளுக்கு உதவியாக உள்ளது.

**AI பயன்பாட்டில் உள்ள சவால்கள்**

தொழில்நுட்ப அறிவு குறைவு, ஸ்மார்ட்போன் மற்றும் இணைய வசதி இல்லாமை, புணூ செயலிகளின் மொழி சிக்கல், ஆரம்ப முதலீட்டு செலவு, நேரடி பயிற்சி மற்றும் வழிகாட்டல் இல்லாமை.

இந்த சவால்கள் காரணமாக, பல சிறு விவசாயிகள் AI தொழில் நுட்பத்தை முழுமையாக பயன்படுத்த முடியாமல் உள்ளனர்.

**அரசு மற்றும் நிறுவனங்களின் பங்கு**

AI தொழில்நுட்பம் சிறு விவசாயிகளுக்கு எளிதாக கிடைக்க அரசு, வேளாண் துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து செயல்பட வேண்டும். கிராம அளவிலான பயிற்சிகள், தமிழ் மொழி செயலிகள் மற்றும் மானிய உதவிகள் மூலம் இந்த தொழில் நுட்பத்தை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க முடியும்.

**முடிவுரை :** செயற்கை நுண்ணறிவு என்பது சிறு விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். ஆனால், சரியான பயிற்சி, வசதி மற்றும் ஆதரவு இல்லையெனில் அது ஒரு சவாலாக மாறக்கூடும். தொழில்நுட்பமும் பாரம்பரிய அறிவும் இணைந்தால், இந்திய விவசாயத்தின் எதிர்காலம் நிச்சயம் வளமானதாக இருக்கும்.

தகவல் : மேலும் விவரங்களுக்கு, **ம.பாமா, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, சு.சந்தியா, உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண்: 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்



# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்




பெரம்பலூர், பிப்.5

பெரம்பலூர் மாவட்டம், நூத்தப்பூர் கிராமத்தில் இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி மக்காசோளத் தோட்டத்தில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்துவதால் பெறும் நன்மைகள் மற்றும் இத்திரவ உரங்களை இலைவழி தெளிப்பு முறையில் பயன்படுத்தும் முறை குறித்து விவரித்தார். குருணை உரங்களைவிட விலை குறைவு, எடுத்து செலவும் சுலபம். மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இது முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களை பயன்படுத்துவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# செடியின் நுனியை 2ஜி, 3ஜி கட்டிங் செய்வது பற்றி தெரியுமா?




2ஜி, 3ஜி என்றும் உங்களுக்கு சட்டென்று என்ன ஞாபகம் வரும் என்பது எனக்கு தெரியும். ஆனால் இந்த பதிவில் தோட்டக் கலைத்துறையில் கொடியில் படரும் செடிகளை கட்டிங் செய்ய பயன்படுவது 2ஜி, 3ஜி முறை தான். அது என்ன எப்படி (CUTTING) செய்வது என்பதை இந்த பதிவில் விரிவாக பார்ப்போம்.

எந்த வேலை செய்தாலும் அதனை தொழில் நுணுக்கங் களுடன் செய்தால் மட்டுமே வெற்றிகரமாக செய்ய முடிக்கும். இது விவசாயத்திற்கும் பொருந்தும், அதில் ஈடுபாடு இருந்தாலே தானாக தொழில்நுட்ப நுணுக்கங்கள் வரும். ஏக்கர் கணக்கில் விவசாயம் செய்தாலும், சரி வீட்டு தோட்டமாக இருந்தாலும் சரி நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டுமானால் பல தொழில்நுட்ப நுணுக்கங்களை கையாண்டால் கூடுதலான மகசூல் கிடைக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

## 2ஜி, 3ஜி என்றால் என்ன?

ஒரு செடியின் முதல் கிளை தான் முதல் தலைமுறை, அதாவது முதல் ஜெனரேசன் (GENERATION) இது தான் 1 ஜி இதிலிருந்து முளைக்கும் அடுத்த கிளைதான் 2 ஜெனரேசன். அதாவது 2ஜி. அதே போல் இராண்டாவது கிளையிலிருந்து முளைக்கும் கிளைகள் 3ஜி என்றும் இதிலிருந்து முளைப்பது 4ஜி என்றும் அழைக்கப்படுகின்றன. இதில் 2 G, 3 G கட்டிங் சிறந்த பலனளிப்பதாக முன்னோடி உழவர்கள் தங்களுடைய அனுபவத்தை தெரியப்படுத்து கின்றனர்.

## கட்டிங் (CUTTING) செய்வது எப்படி?

ஒரு செடியின் கிளை 1 மீட்டர் அளவிற்கு வளர்ந்து 6-7 இலைகள் முளைக்கும் போது அதனுடைய மேல் பகுதி கத்திரிக்கப்படும். அதனால் அந்த கிளை மேலும் வளராமல் அடுத்த ஜெனரேசன் கிளை வளரத் தொடங்கும். அதே போல் இதுவும் ஒரு மீட்டர் வளர்ந்ததும் கத்தரித்தால் 3வது ஜெனரே - சன் கிளைகள் வளரத் தொடங்கும்.

**எந்த செடிகளில் இந்த கட்டிங் செய்ய முடியும்?**

நிறைய அடர்த்தியாக கிளைகள் வளரும் செடிகளில் இந்த கட்டிங் (2G, 3G CUTTING) செய்யலாம். எடுத்துக்காட்டாக பந்தலில் படரும் செடிகளான வெள்ளரி, பூசணி, பாகல், கோவைக்காய் போன்ற கொடிவகை செடிகளில் இது பலனளிப்பதாக விவசாயிகள் தங்களுடைய அனுபவ ரீதியாக நுணுக்கங்களை தெரிவிக்கின்றனர்.

**கத்தரிப்பதால் கிடைக்கும் பலன்கள்?**

முதல் ஜெனரேன் கிளையில் பூக்கும் பூக்கள் பெரும்பாலும் ஆண் பூக்கள் தான். இவை இனப்பெருக்கத்திற்கு மகரந்த சேர்க்கைக்கு மட்டுமே உதவும். இவை காய்க்காது, பலன் அளிக்காது. இராண்டாவது ஜெனரேசன் கிளையில் ஒரு இலையை விட்டு அடுத்த இலையின் பக்கத்துல பெண் பூக்கள் இருப்பதை பார்க்க முடியும். அதாவது காயாக, பழமாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**என்ன கட்டிங் செய்ய தொடங்கி விட்டாச்சா, ?**

**அவ்வளவு அவசரமா?**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# அசோலா வளர்ப்பு பற்றி செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



சிவகங்கை, பிப்.5

சிவகங்கை மாவட்டம், தேவ கோட்டை வட்டம், செலுவத்தி கிராமத்தில் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் கீழ் வேளாண் மாணவிகள் விவசாயிகளுக்கு அசோலா வளர்ப்பு மற்றும் அதன் பயன்களை எடுத்துரைத்தனர்.

அசோலா வளர்ப்பில் நிலத்தில் நிழலுள்ள பகுதியில் 1 அடி ஆழத்திற்கு குழி தோண்டி பாலீத்தீன் விரிப்பு இட்டு அதில் தண்ணீர் ஊற்றி பின்னர் அசோலாவை தண்ணீரில் விடவும். இரண்டு வாரங்களில் வளர்ச்சி அதிகரிக்கிறது. குழியின் அகலம் மற்றும் நீளம் அசோலா வளர்பின் அளவை பொறுத்து மாறுபடுகிறது. நெற்பயிர் விவசாயத்தில் அசோலாவை நெற் பயிர்களுக்கு இடையேயான இடைவெளிகளில் வளர்ப்பதன் மூலம் விளைச்சல் அதிகரிக்கிறது. அசோலா உயிரி உரமாக நெற்பயிர் விவசாயத்தில் விளங்குகிறது.

அசோலா கால்நடை மற்றும் கோழிகளுக்கு மாற்றுத் தீவனமாக இருப்பதுடன், நைட்ரஜன் தழைச்சத்தை மண்ணில் தக்க வைக்கும் திறனால் மண்ணின் வளம் அதிகரிக்கிறது.

அசோலாவில் 25-30% புரத சத்து, 14-15% நார்ச்சத்து, 3-4% கொழுப்பு சத்து 40-50% மாவுச்சத்து போன்ற நுண்ணூட்டச்சத்து களை தன்னகத்தே கொண்டுள்ளது.

அசோலாவை கால்நடை மற்றும் கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்துவதால் 15-20% பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், கொழுப்புச் சத்து மற்றும் பாலின் தரம் உயர்கிறது. கோழிகளில் உடல் எடை உயர்தல், முட்டையின் மஞ்சள் கரு அடர் நிறத்திலும் காணப்படும்.

அசோலா வளர்ப்பு பற்றிய விளக்கமானது மிகவும் பயனுள்ள தாக இருந்ததாக விவசாயிகள் கூறினர். மேலும் விவசாயி களின் சந்தேகங்களுக்கு வேளாண் மாணவிகள் விளக்கம் அளித்தனர்.

# கிசான் கிரெடிட் கார்டு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், பிப்.5

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயி களுக்கு செயல்விளக்கம் மூலம் கிசான் கிரெடிட் கார்டு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.






கிசான் கிரெடிட் கார்டு (Kisan Credit Card - KCC) என்பது இந்திய அரசால் விவசாயிகளின் நிதி தேவைகளை எளிதாக்க உருவாக் கப்பட்ட ஒரு முக்கிய மான கடன் திட்டமாகும். இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி, விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், நீர்ப்பாசனம், உழவு, அறு வடை மற்றும் சந்தைப் படுத்தல் போன்ற வேளாண்மை பணி களுக்குத் தேவையான பணத்தை குறைந்த வட்டி விகிதத்தில் சரியான நேரத்தில் வழங்குவதாகும். கிசான் கிரெடிட் கார்டு மூலம் விவசாயிகள் வங்கிக்கு அடிக்கடி செல்லாமல், தேவையான போதெல்லாம் கடனை எடுத்தும், திருப்பிச் செலுத்தியும் பயன்படுத்த முடியும்.

இந்த திட்டத்தில் அரசு வட்டி சலுகை வழங்குவதால், விவசாயிகள் மிகவும் குறைந்த வட்டியில் (சரியான நேரத்தில் செலுத்தினால் 4% வரை) கடன் பெற முடிகிறது. பொதுவாக பயிர் கடனுக்கு ரூ.3 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. சில மாற்றங்களின்படி இந்த வரம்பு மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. பல வங்கிகள் கிசான் கிரெடிட் கார்டை RuPay ATM கார்டாக வழங்குகின்றன, இதன் மூலம் ஏடிஎம் மற்றும் மைக்ரோ ஏடிஎம் வழியாக பணம் எடுக்கவும், வாங்கல்களுக்கு பயன்படுத்தவும் வசதி உள்ளது. மேலும், இந்த கார்டுடன் பயிர் காப்பீடு மற்றும் விபத்து காப்பீடு போன்ற பாதுகாப்பு வசதிகளும் இணைக்கப் பட்டுள்ளன.

நிலம் வைத்துள்ள விவசாயிகள் மட்டுமல்லாமல், வாடகை விவசாயிகள், கூட்டுப் பயிரிடுபவர்கள், சுய உதவி குழுக்கள், கூட்டு பொறுப்புக் குழுக்கள் (JLG) உறுப்பினர்கள், கால்நடை வளர்ப்போர் மற்றும் மீன்வளத் தொழிலில் ஈடுபடுவோரும் கிசான் கிரெடிட் கார்டுக்கு தகுதி பெறலாம். விவசாயிகள் தங்கள் அருகிலுள்ள தேசியமய வங்கி, கூட்டுறவு வங்கி அல்லது பிராந்திய கிராம வங்கிகளில் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். கிசான் கிரெடிட் கார்டு திட்டம் விவசாயி களை தனியார் கடன் வட்டி சுமையிலிருந்து காப்பாற்றி, அவர்களின் வருமான நிலைத்தன்மையையும் வேளாண்மை வளர்ச்சியையும் மேம்படுத்தும் ஒரு பயனுள்ள திட்டமாக விளங்குகிறது.

# இரசாயன உரங்களுக்கு பதிலாக பஞ்சகாவ்யா பயன்படுத்துங்கள்

வேலூர், பிப்.5

நவீன விவசாயம் என்ற பெயரில் இரசாயன உரங்கள், இரசாயன பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவதால், இடுபொருட்களின் செலவுகள் வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டே போகிறது. மேலும் நிலம், நீர், காற்று மாசுபட்டு உணவுப் பொருட்கள் நஞ்சாகி (தாய்ப்பாலே நஞ்சாகி விட்டது என ஆராய்ச்சிகள் கூறுகின்றன) மனிதனுக்கு பல்வேறு நோய்கள் வருகின்றன. இதிலிருந்து விடுபடுவது எப்படி? இதற்கு மாற்று வழி என்ன? இதற்கு விடை இயற்கை விவசாயம் செய்வதுதான். இதில் பஞ்சகாவ்யம் முதலிடம் வகிக்கிறது. பஞ்சகாவ்யா என்பது பசுவிலுருந்து ஐந்து பொருள்களான சாணம், கோமியம், பால், தயிர் மற்றும் நெய் ஆகியவற்றின் கலவையாகும்.

**பஞ்சகாவ்யாவின் சிறப்புகள்**

பஞ்சகாவ்யா பயிர்களுக்கு அளிக்க ஆரம்பித்தவுடன் மற்ற எந்த விதமான இரசாயன உரங்களும் இரசாயன பூச்சிக் கொல்லிகளும், நுண்ணூட்ட சத்துக்களும், நுண்ணுயிர் சத்துக்களும் அளிக்கத் தேவையில்லை.

- முழு முதற்கடவுள் போன்று பஞ்சகாவ்யா முழு முதல் உரமாக இருந்து பயிர்களுக்கு அனைத்து தேவைகளையும் தானே பூர்த்தி செய்கிறது.
- இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு, இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டது.
- பக்க விளைவுகள் இல்லாதது.
- செலவோ குறைவு, விளைச்சலோ அதிகம் (சுமார் 20% முதல் 50% வரை விளைச்சல் கூடும்)
- நிலம், நீர், காற்று மாசுபடுவதை தடுக்கிறது.
- விளைபொருட்களின் எடை 20% முதல் 30% கூடுகிறது.
- பஞ்சகாவ்யாவை பயன்படுத்தி விளைவிக்கப்படும் பொருட்கள் நஞ்சில்லாதது. ஆகவே மனிதர்களுக்கும், கால் நடைகளுக்கும் வரும் நோய்கள் தடுக்கப்படுகின்றன.

● எல்லாப் பேருமூட்ட சத்துக்களும் (நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்பரஸ்) எல்லா இரண்டாம் நிலை சத்துக்களும் (கால்சியம், மக்னீசியம், சல்பர்) நுண்ணூட்ட சத்துக்களும் (ஜிங்க், காப்பர், மாங்கனீஸ், இரும்பு, போரான், மாலிப்டினம்) நுண்ணுயிர் சத்துக்களும் (அசோஸ் பைரில்லம், அசிட்டோ பேக்டர், பாஸ்போபேக்டீரியம், சூடோமோனஸ்) மேலும் பயிர் வளர்ச்சி ஊக்கிகளும் மிகுந்த அளவில் உள்ள நல்ல உயிர் உரம் இது.

● 75% உரமாகவும், 25% பூச்சி மருந்தாகவும் செயல்படு கிறது.

● பயிர்களுக்கு நுண்ணுட்டச்சத்துக்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகிறது.

● பயிர்கள் வேகமாக வளர்ச்சி அடைந்து விரைவில் அறுவடைக்கு வருகிறது.

● விளைபொருட்கள் தரமானதாக இருப்பதாலும், காய்கறி களும், பழங்களும் அதிக நாட்கள் வாடாமல் இருப்பதாலும் வியாபாரிகள் அதிக விலைகொடுத்து வாங்கி கொள்கின்றனர்.

● பஞ்சகாவ்யத்தை தொடர்ந்து உபயோகித்து வருவதால் நாளடைவில் மண்ணில் மண் புழுக்களும், நுண்ணுயிர்களும் அதிகமாகிறது. மண்ணின் பொலபொலப்பு தன்மை அதிகமாகி மண்ணில் காற்றோட்டம் அதிகமாகிறது. அதனால் மண்ணில் நூல் புழுக்களும், பூஞ்சாணங்களும், நோய்கிருமிகளும் உண்டாவதில்லை. இதன் பயனாக வேர் அழுகல், கிழங்கு அழுகல் நோய்கள் வருவதில்லை.

● நீரின் தேவை 30% குறைகிறது.

இவ்வாறு பஞ்சகாவ்யாவை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என வேலூர் விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.லதா தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்** நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது



கடலூர், பிப்.5

கடலூர் மாவட்டம், கம்மாபுரம் வட்டாரத்தில் நேற்று விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் வேளாண்மை உதவி இயக்குனர் வெங்கடேசன், தலைமை தாங்கினார். அட்மா குழு தலைவர் K.R.ராயர் கலந்து கொண்டார். வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் அண்ணா சாமி, வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் சுஜித் மற்றும் மண்டல ஆராய்ச்சி பேராசிரியர் ஹரி சுதன், நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் விதை நேர்த்தி, பயிர் பாதுகாப்பு, இயற்கை சாகுபடி முறைகள், உர மேலாண்மை, பற்றி பயிற்சி அளித்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர், அக்ரி தங்கதுரை, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள், ரமேஷ், பஞ்சமூர்த்தி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள், ரமேஷ் ராஜீவ் காந்தி செய்திருந்தனர். விவசாயிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

# மாமரத்தைத் தாக்கும் கரும்பூஞ்சை நோய் தடுப்பு குறித்த செயல்விளக்கமளித்த கல்லூரி மாணவி



மதுரை, பிப்.5

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் மாணவி அ.பாலதர்ஷினி, நிலக் கோட்டை வட்டார ராஜதானி கோட்டை யிலுள்ள விவசாயிகளிடம் மா மரத்தைத் தாக்கும் கரும்பூஞ்சை நோய் (Sooty Moul) கட்டுப்பாடு குறித்த செயல்விளக்கம் அளித்தார். அதில் 5% மைதா மாவு கரைசல் என்னும் உத்தியைப் பயன்படுத்தினர். 5% என்பது 100ல் 5 பங்கு. அதாவது 1 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் மைதா மாவைக் கட்டி இல்லாமல் கலந்து, தெளிப்பான் மூலம் பாதிக்கப்பட்ட இலையில் அந்த கரைசலை அடிக்க வேண்டும். அந்தத் தண்ணீர் காய்ந்த உடன் மைதா துகள்களோடு அந்த கரும்பூஞ்சையும் ஒட்டிக் கொண்டு உதிர்ந்து விடும். பிறகு இலைகள் பச்சையாக மரம் வளமாக மாறிவிடும். இது பற்றிய துண்டுப்பிரசுரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

# பசுமை பரிமாற்றம் : வேளாண் மாணவர்களின் பயிர் வளர்ச்சி–புதிய முயற்சி–பஞ்சகவ்யம் தயாரிப்பு

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த IV ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் JK Batch மாணவ மாணவிகள், ELAGR 401 - Agriculture Waste Management மற்றும் ELAGR 402 - Organic Production Technology (Experiential learning - அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, பஞ்சகவ்யம் (Panchagavya) தயாரிப்பு தொடர்பான நடைமுறை பயிற்சியை கல்வி மற்றும் பயிற்சி நோக்குடன் முறையாக மேற்கொண்டனர்.

இந்த பயிற்சியில் மொத்தம் 50 மாணவர்கள் பங்கேற்று, பஞ்சகவ்யத்தின் பயன்பாடு மற்றும் விவசாயத்தில் அதன் முக்கியத்துவம் குறித்து பயிற்சி பெற்றனர். மேலும் பஞ்ச கவ்யத்தை தயாரிப்பதும் கற்றுக்கொண்டனர். இப்பயிற்சி முனைவர் K.சுசீந்திரன், உதவிப் பேராசிரியர், முனைவர் R. கிருஷ்ணமூர்த்தி, உதவிப் பேராசிரியர் மற்றும் முனைவர் பு.சுந்தரி, பேராசிரியர் மற்றும் உழவியல் துறைத் தலைவர் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் சிறப்பாக நடத்தப்பட்டது.



**பஞ்சகவ்யம் தயாரிக்க தேவையான பொருட்கள்**

- மாட்டு சாணம்
- மாட்டு சிறுநீர் (கோமியம்)
- நாட்டு மாட்டு பால்
- தயிர்
- நெய்

**தயாரிப்பு முறை**

● மாட்டுசாணம் மற்றும் நெய்யை முதல் நாள் நன்கு கலந்து மூடி வைக்கவும். தினமும் இரண்டு வேளைகளிலும் நன்கு கலக்கவும்.

● மூன்று நாட்களுக்குப் பிறகு மீதமுள்ள மூன்று பொருட் களான தயிர், நெய் மற்றும் மாட்டு சிறுநீர் (கோமியம்) இம் மூன்றையும் அத்துடன் கலந்து 15 முதல் 20 நாட்களுக்கு காலை, மாலை என இரு வேலைகளும் நன்கு கலக்கவும்.

● பஞ்சகவ்யா தயார் செய்யும் பாத்திரம் நிழலான இடத்தில் காடா துணி அல்லது கொசுவலை கொண்டு மூடி வைத்தல் வேண்டும். ஏனென்றால் ஈக்கள் அதில் முட்டையிட்டு புழுக்களை உருவாக்கிட நேரிடும்.

● 30 நாட்களில் பஞ்சகவியா தயாராகி விடும்.

**பயன்படுத்தும் முறை**

● பொதுவாக பஞ்சகவ்யா அனைத்து பயிர்களுக்கும் தெளிக்கபடலாம் (3 லிட்டர் பஞ்சகவ்யா 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்).

● பாசன நீருடன் பஞ்சகாவியாவை 50 லிட்டர் கேரக்டர் மூலம் பயிர்களுக்கு கொடுக்கலாம்.

**பஞ்சகவ்யம் – பயன்பாடுகள்**

1. **வளர்ச்சி ஊக்குவிப்பது** – செடிகளின் உயரம், இலை வளர்ச்சி மற்றும் வேர்களை மேம்படுத்தும்.
2. **பூக்கும் மற்றும் பழம் தரும் செடிகளில்** – செடியின் பழுதுகளை குறைத்து, வளரும் விகிதத்தை அதிகரிக்கும்.
3. **நுண்ணுயிர் சீரமைப்பு** – மண்ணின் உயிரணுக்கள் மற்றும் நுண்ணுயிர்களை சீராக வளர்க்க உதவும்.
4. **பொருட்களின் ஊட்டச்சத்து மிக்க பயன்பாடு** – அனைத்து முக்கிய ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஹார்மோன்களை செடி களுக்கு வழங்கும்.
5. **பயிர் நோய் தடுப்பு** – சில பூஞ்சை மற்றும் நோய் தாக்கங் களை குறைக்கும்.
6. **பூச்சிக்கொல்லி மாற்று** – ரசாயன பூச்சிக்கொல்லி இல்லாமல் இயற்கையாக பூச்சிகளை கட்டுப்படுத்த உதவும்.

தகவல் : **நிதிஷ் குமார் க, IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.**

# பசுமை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தை [Pasumai FPO] பார்வையிட்ட வேளாண் மாணவிகள்

மதுரை, பிப்.5

அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத்தின் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் செயல்பட்டு வரும் பசுமை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தைப் (Pasumai Farmer Producer Company - FPO) பார்வையிட்டனர். இந்த நிறுவனம் 07 ஜூலை 2023 அன்று தொடங்கப்பட்டு, FPO சட்டம், 2013ன் கீழ் பதிவு செய்யப்பட்டு






உள்ளது. தற்போது இந்த நிறுவனத்தில் 1,000 விவசாயிகள் உறுப்பினர் களாக உள்ளனர். இந்த நிறுவனத்தின் தலை வராகவும் மேலாண்மை இயக்குநராகவும் மா.தனிராஜன் செயல்பட்டு வருகிறார். நிதி இயக்குநராக கே.தங்கராஜ் உள்ளார். உறுப்பினர் விவசாயிகள் வாழை, தென்னை, மாம்பழம், தக்காளி, நெல், கொய்யா மற்றும் பல்வேறு காய்கறிகள் போன்ற பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சிக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலிடம் ரூ.23 லட்சம் நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இந்த FPO, உறுப்பினர் விவசாயிகளை ஆதரிக்கும் வகையில் குறைந்த வாடகையில் இயந்திரங்களை வழங்கும் கஸ்டம் ஹையரிங் சென்டர்கள் (Custom Hiring Centres) மூலம் விவசாய உபகரணங்களை வழங்கி வருகிறது. இதன் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகள் குறைந்த செலவில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயம் செய்ய முடிகிறது. மேலும், இந்த நிறுவனம் உலக வங்கி நிதியுதவி பெற்ற IAMWARM (Irrigated Agriculture Modernization and Water-Bodies Restoration and Management) திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் மூலம் விவசாய உற்பத்தித் திறன் மேம்பாடு மற்றும் விவசாயிகளின் வருமான உயர்வு நோக்கமாகக் கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. களப் பார்வையின் போது நிறுவனத்தின் SWOC (வலுவுகள், பலவீனங்கள், வாய்ப்புகள், சவால்கள்) குறித்து விவாதிக்கப்பட்டது.

உறுப்பினர்களிடையே உள்ள ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை நிறுவனத்தின் முக்கிய வலுவாகக் குறிப்பிடப்பட்டது. அதே நேரத்தில், அனைத்து உறுப்பினர்களும் இதன் பயன்களை சமமாக பெறவில்லை என்பது ஒரு பலவீனமாக அடையாளம் காணப்பட்டது. ஏற்றுமதி மற்றும் மதிப்பு கூட்டுதல் (Value Addition) ஆகியவை முக்கிய வாய்ப்புகளாக உள்ளன. ஆனால், போட்டியாளர்கள் அதிகரிப்பு நிறுவனத்தின் முக்கிய சவாலாகக் கருதப்படுகிறது. இந்த களப் பார்வை, விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்படும் FPOக்களின் முக்கியத்துவத்தையும், அலங்காநல்லூர் பகுதியில் விவசாய வளர்ச்சிக்காக பசுமை ய்ணேநு மேற்கொண்டு வரும் முயற்சிகளையும் மாணவர்களுக்கு தெளிவாக எடுத்துக் காட்டியது.

# பெரம்பலூர் மாவட்டத்தில் எள் பயிரில் சாம்பல் நோய் மேலாண்மை

## வேளாண்மை அதிகாரி அறிவிப்பு



பெரம்பலூர், பிப்.5

பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டு எள் பயிர் ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கண்ணனின் உத்தரவின் படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை அலுவலர் ரமேஷ் எள் சாகுபடி வயலை ஆய்வு செய்தனர். ஆய்வின் போது, எள்ளு பயிர் சாம்பல் நோயில் பாதிக்கப்பட்டது என்பது அறியப்பட்டது. சாம்பல் நோய் என்பது எள்ளு பயிரில் அடிக்கடி காணப்படும் ஒரு பூஞ்சை நோயாகும். இந்த நோய் வந்தால் இலைகள், தண்டுகள், மற்றும் மலர் பகுதிகளில் வெள்ளை மாவு போன்ற பூஞ்சை படலம் தோண்டி, மகசலை கடுமையாக பாதிக்கும்.

### நோயின் அறிகுறி

இலையின் மேற்பரப்பில் வெள்ளை சாம்பல் நிற மாவு போன்ற படலம், இலைகள் மஞ்சள் நிறமாகி உதிர்ந்து விடுதல். தாவர வளர்ச்சி குன்றி காணப்படும், காய் பிடிப்பு குறையும். எள்ளு விதைகள் சிறியதாகும்.

### இந்த சாம்பல் நோயை பின்வருமாறு கட்டுப்படுத்தலாம்

### பண்பாட்டு மேலாண்மை

இந்த வகையில் நோயற்ற தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும். சரியான இடைவெளி 30 x 10 சென்டிமீட்டர் பராமரிக்க வேண்டும். நோயுற்ற இலைகள் செடியை அகற்றி, அளிக்க வேண்டும். அதிக அளவு தழைச்சத்து உரத்தை தவிர்க்க வேண்டும். சமச்சீர் முறையில் உரம் இடுதல் வேண்டும். பயிர் சுழற்சி பின்பற்ற வேண்டும்.

### உயிரியல் மேலாண்மை

சூடோமோனாஸ் ஐந்து கிராம் ஒரு லிட்டர் நீர், டீவிரிடி ஒரு லிட்டர்

நீர், நோய் ஆரம்ப நிலையில் 10லிருந்து 15 நாட்களுக்குள் ஒரு முறை இலையின் மேல் தெளிக்க வேண்டும்.

**இயற்கை முறையில் மேலாண்மை**

வேப்ப எண்ணெய் 3 மில்லி ஒரு லிட்டர் நீர், மோர் கரைசல் 10 சதவீதம் இலை மேல் தெளித்தல், பால் : நீர் 1:9 என்ற விகிதம் நோய் தாக்குதலில் ஆரம்ப நிலையில் தெளித்தால் மிகுந்த பயனளிக்கும்.

**ரசாயன மேலாண்மை**

Wettable sulper( 80wp)2.5 g/ liter, water, **அல்லது** Hexaconazole (5 EC)1 ml / liter water **அல்லது** Tebuconazole (25 EC) 0.5 - 1.0 ml / liter water என்ற வகையில் 10 முதல் 12 நாட்கள் இடைவெளியில் மாற்றி மாற்றி தெளிக்க வேண்டும் என வேளாண்மை இணை இயக்குனர் கண்ணன் தெரிவித்தார்.

## தென்னைகளில் காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி



திண்டுக்கல், பிப்.5

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரம், வீலிநாயக்கன்பட்டி கிராமத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவி K.A.அபியா, விவசாயிகளுக்கு தென்னைகளில் காண்டாமிருக வண்டை கட்டுபடுத்த அந்து உருண்டை பயன்படுத்தும் முறையை செயல்முறை விளக்கத்துடன் விளக்கினார்.

இதில் நாப்தலீன் பால் எனப்படும் அந்து உருண்டையை பயன்படுத்துவதன் மூலம் வண்டுகள் மரத்தில் தங்காமல் விரட்டப்படுவதும், இளம் குருத்து சேதம் குறைந்து மர வளர்ச்சி பாதுகாக்கபடுவதும் நேரடி செயல்முறையால் விளக்கப்பட்டது.

மேலும், குறைந்த செலவில் எளிதாக பின்பற்றக்கூடிய இந்த முறையால் தென்னை மகசூல் அதிகரிக்க முடியும் என விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

# மண் மாதிரி சேகரிப்பு தொடர்பான பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, பிப்.5

ஈரோடு மாவட்டம், குமரகுரு வேளாண் கல்லூரியில் இளநிலை இறுதியாண்டு பயிலும் மாணவிகள் சத்திய மங்கலம் வட்டாரத்தில் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி யினைப் பெற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, சத்திய மங்கலம் வட்டாரம், கோண மூலை கிராமத்தில் உள்ள தோட்டக்கலை குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு தொடர்பான பயிற்சி நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில், மண்ணின் வளத்தை அறிந்து சரியான உர மேலாண்மையை மேற்கொள்ள மண் மாதிரிகளை எவ்வாறு சரியான முறையில் சேகரிக்க வேண்டும் என்பதைக் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. மண் மாதிரி எடுக்கும் இடைவெளி, ஆழம், கருவிகள் பயன்பாடு, மாதிரி தயாரிப்பு மற்றும் ஆய்வகத்திற்கு அனுப்பும் முறை போன்ற முக்கிய அம்சங்கள் பயிற்சியில் விளக்கப்பட்டன. பயிற்சியை நடத்திக் காட்டிய வேளாண் மாணவிகள், காட்சிப் பலகைகள் மூலம் விவசாயிகளுக்கு எளிய முறையில் விளக்கம் அளித்தனர். இதில் கலந்து கொண்ட விவசாயிகள் பயிற்சியினை ஆர்வத்துடன் கேட்டறிந்து, சந்தேகங் களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர். இந்தப் பயிற்சி, மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தை உணர்த்தி, உரச் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில் அமைந்தது.

# தர்பூசணி பயிரில் பழ ஈ தாக்குதலை கட்டுப்படுத்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய வேளாண் மாணவர்கள்

திருச்சி, பிப்.5

திருச்சி மாவட்டம், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள், பழனி வட்டம், வேலம்பட்டி கிராமத்தில், தர்பூசணி பயிரிடும் விவசாயிகளுக்காக பழ ஈ (Fruit Fly) மற்றும் Armyworm

தாக்குதலை குறைக்கும் முறைகள் குறித்து நேரடி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். இந்த நிகழ்ச்சியில், தர்பூசணி பயிரில் அதிக அளவில் ஏற்படும் பழ ஈ தாக்குதலால் விளைச்சல் மற்றும் தரம் கடுமையாக பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டி விளக்கப்பட்டது. குறிப்பாக பழங்களில் துளையிட்டு முட்டையிடும் பழ ஈ காரணமாக பழங்கள் அழுகி, சந்தை மதிப்பு குறைவது குறித்து விவசாயி களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு பழப்பொறி (Fruit Fly Trap) மற்றும் இனக் கவர்ச்சி பொறி (Pheromone Trap) ஆகியவற்றின் முக்கியத்துவம், பயன்பாட்டு முறை மற்றும் பயன்கள் குறித்து நேரடியாக செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இனக்கவர்ச்சி பொறி மூலம் ஆண் பழ ஈக்களை ஈர்த்து பிடிப்பதன் மூலம் அதன் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என்றும், இதன் மூலம் ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டை குறைக்கலாம் என்றும் விளக்கப்பட்டது. மேலும், சரியான இடைவெளியில் வலைகளை நிறுவுவது, ஒரு ஏக்கருக்கு தேவையான வலைகளின் எண்ணிக்கை, பராமரிப்பு முறைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத பூச்சி மேலாண்மை முறைகள் குறித்தும் விவசாயி களுக்கு வழிகாட்டப்பட்டது.

## பருத்தி விவசாயிகளுக்கு சோலார் விளக்கு பொறி குறித்த செயல்விளக்கமளித்த வேளாண் மாணவி



திண்டுக்கல், பிப்.5

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரத்திற்கு உட்பட்ட குல்லலக்குண்டு கிராமத்தில், மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி அபியா ஸ்ரீ, தனது கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், பருத்தி விவசாயிகளுக்கு சோலார் விளக்கு பொரி அமைப்பது குறித்து செயல்விளக்கப் பயிற்சியை வழங்கினார்.

பருத்தி பயிரில் மொட்டுகள், பூக்கள் மற்றும் காய்களை தாக்கி, பஞ்சின் தரம் மற்றும் மகசூலை கணிசமான அளவில் குறைக்கும் இளஞ்செவ்வப்புக் காய்ப்புழு (Pink Bollworm - Pectinophora gossypiella) இன் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த பயிற்சி நடத்தப்பட்டது. சுற்றுச்சூழலுக்கு உகந்த கருவியான சோலார் விளக்கு பொறியின் அவசியம், பருத்தி தோட்டங்களில் அதை நிறுவும் முறை, அதன் செயல்பாட்டு விதம் மற்றும் பயன்படுத்த

வேண்டிய நெறிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது. மேலும், பருத்தி தோட்டத்தில் சோலார் விளக்கு பொறி யை நேரடியாக நிறுவி, அதன் பயன்பாட்டை விவசாயி களுக்கு செயல்விளக்கமாகக் காண்பித்தார்.

# ஒரு தட்டு கிராமத்தில் விவசாயிகளுக்கு கிசான் அழைப்பு மையம் [Kisan Call Centre] குறித்த விழிப்புணர்வு பயிற்சி

திண்டுக்கல், பிப்.5

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒத்தக்கடை, மதுரையைச் சேர்ந்த இறுதியாண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் மாணவி அ.பாலதர்ஷினி, நிலக்கோட்டை வட்டார ஒரு தட்டு கிராமத்திலுள்ள விவசாயி களிடம் கிசான் அழைப்பு மையம் (Kisan Call Centre) பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பயிற்சி அளித்தார்.



அதில், விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு கட்டணமில்லா தொலைபேசி எண் 1800-180- 1551-ஐத் தொடர்பு கொண்டு வேளாண் நிபுணர்களிடம் நேரடித் தீர்வு களைப் பெறலாம் என்று விளக்கினார். இந்தச் சேவை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை னைத்து நாட்களிலும் செயல்படும் என்றும், விவசாயிகள் தங்கள் தாய்மொழியான தமிழிலேயே பேசி உரங்கள், பூச்சி மேலாண்மை மற்றும் சந்தை நிலவரம் குறித்து அறிந்து கொள்ளலாம் என்றும் கூறினார்.

மேலும், உழவன் செயலி (Uzhavan App) மூலமாகவும் இந்த சேவையை எவ்வாறு பெறுவது என்பது குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் இறுதியில் இது தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, அவர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளிக்கப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

- ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
- ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
- ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
- ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
- ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**